# குளித்தலை நகராட்சி

06.01.2020.ஆம் தேதி திங்கட்க்கிழமை காலை 10.30 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்(பொ)
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. குளித்தலை நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(பொ) திரு.ந.புகழேந்தி அவர்களின் டிசம்பர் 2019.ஆம் மாத தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 02. குளித்தலை நகராட்சிப் பகுதியில் பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் முக்கிய சாலைகளில் கீழ்க்கண்ட விபரப்படி தார்சாலைகள் அமைக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்ட பழுதடைந்துள்ள சாலைகளை சீரமைக்கும் பணிக்கு ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் 14.வது மத்திய நிதிக்குழுவின் 2019–2020.ம் ஆண்டிற்கான முதல் தவணை மானியத் திட்டத்தின்கீழ் நிதி பெற்று செயல்படுத்த நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வார்டு | தார்சாலை மேம்பாட்டு பணி விபரம் | நீளம் | அகலம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1) | 24 | கலப்புக்காலனி தென்புறம் முதல்குறுக்கு தெரு மேற்கு, அண்ணாநகர், கலப்புக்காலனி மற்றும் அண்ணாநகர் குறுக்குத் தெருக்கள் | 760 மீ | 5.30 மீ | 35.00 |
| 2) | 23 மற்றும் 24 | அண்ணாநகர் பைபாஸ்ரோடு மற்றும் அண்ணாநகர் 6.வதுதெரு மேற்குப் பகுதிகளில் தார்சாலை மேம்படுத்தும் பணி செய்தல் | 620 மீ | 5.90 மீ | 35.00 |
| 3) | 23 | அண்ணாநகர் பிள்ளையார்கோவில்தெரு மற்றும் ராஜாஜிதெருக்கள். | 572 மீ | 7.60 மீ | 35.00 |
| 4) | 23 மற்றும் 24 | அண்ணாநகர் கலப்புக்காலனி தெற்கு மெயின்ரோடு மற்றும் அண்ணாநகர் பழைய நகராட்சி அலுவலக சாலை | 288 மீ | 7.40 மீ | 15.00 |
| | | மொத்தம் | 2240 மீ | | 120.00 |

மேலும் 14.ம் மத்திய நிதிக்குழுவின் 2019–2020.ம் ஆண்டிற்கான மானியம் ரூ.110.41 இலட்சம் முதல்தவணையாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மதிப்பீட்டில் மீதமுள்ள தொகை ரூ.9.59 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி அளிக்கலாம்.
(ந.க.எண்.15/2020/இ1)

பொருள்– 03. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN-47-AY-6449 என்ற எண்ணுள்ள Front and Back Loader வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்வதற்கு, நாள்–15.11.2019.ல் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | செலவினம் ரூ. |
|---|---|---|
| 1) | JVK Auto Diesel Works, JVK Campus, Kalarmpatty mainroad, Salem – 636 015. | 245300.00 |
| 2) | Lakshmi Auto Diesel Works, Government Approved Work Shop Corner, Salem mainroad, Mettur Dam – 636 401. | 229860.00 |

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இந்நகராட்சி பொது சுகாதார அவசர அவசியம் கருதி, ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும், பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரித்து அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2311/2019/எச்1)

பொருள்–04. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN-47-AS-5098 என்ற எண்ணுள்ள வாகனத்திற்கு தகுதிச்சான்று பெற பழுது நீக்கம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.80,000/–க்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் செலவினம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2683/2019/எச்1)

பொருள்–05. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் TN-47-AY-6449 என்ற எண்ணுள்ள Front and Back Loader வாகனத்திற்கு 130-AH Capacity கொண்ட பேட்டரி வாங்குவதற்கு, நாள்–03.12.2019.ல் விலைப்புள்ளி கோரப்பட்டது. அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | விலை ரூ. |
|---|---|---|
| 1) | Radar Power System, UPS-Inverters-Batteries, No.175,Sardhar Vallapai Patal street, Tennur Trichy. | 12800.00 |
| | Old Battery Less (-) | 1000.00 |
| | | **11800.00** |
| 2) | Sri Madura Powers, 7/B,Vaiganallur Elementaryschoolstreet, Kadamberkovil, Kulithalai – 639 104. | 11800.00 |
| | Old Battery Less (-) | 1800.00 |
| | | **10000.00** |
| 3) | Green Power Care, Online UPS – UPS – Batteries, No.43,1st Floor, Nataraja Complex, Old Bus-stand, Musiri. | 12500.00 |
| | Old Battery Less (-) | 1500.00 |
| | | **11000.00** |

அலுவலக குறிப்பு– 1). வரிசை 2.ல் ஆன Sri Madura Powers நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2). இந்நகராட்சி பொது சுகாதார அவசர அவசியம் கருதி, ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும், பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரித்து அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2661/2019/எச்1)

பொருள்–06. குளித்தலை நகராட்சியின் குடிநீர் பிரிவு லாரி TN-47-E-0264 தகுதிச்சான்று 07.01.2020.ல் முடிவடைவதால், அதனை புதுப்பிக்க அத்தியாவசிய பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு உதிரி பாகங்கள் மாற்றம் செய்யவேண்டி உள்ளது. அதற்கான உத்தேச செலவின மதிப்பீடு ரூ.1.60 லட்சத்தில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.2517/2019/இ1)

பொருள்–07. குளித்தலை நகராட்சி அலுவலக ஜெனரேட்டர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியதன் ஆய்வு கட்டணம் ரூ.1500/–ஐ, அவசர அவசியம் கருதி, அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர், M/s.Bharath Diesel, Trichy-5 நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டது. அதன்படி பெறப்பட்ட ரூ.8706/–க்குரிய கேட்பு தொகையை மேற்கண்ட நிறுவனத்தாருக்கு செலுத்தி, பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அவசர அவசியம் கருதி, ஆய்வுக்கட்டணம் ரூ.1500/– செலுத்தியதை அங்கீகரித்து, மேற்படி Bharath Diesel, Trichy-5 நிறுவனத்தாருக்கு ஜெனரேட்டர் பராமரிப்பு கட்டணம் ரூ.8706/–ஐ, செலுத்தவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.2685/2019/இ1)

பொருள்– 08. குளித்தலை நகராட்சி பகுதியிலான நாப்பாளையம் 20–எச்.பி. மின்மோட்டார் பழுதினை சரிசெய்ய அவசர அவசியம் கருதி, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் பணி மேற்கொள்ளப்பட்டது. அதற்குரிய மின் உபகரணங்கள் ஸ்ரீஅம்மன் எலக்ட்ரிக்கல்ஸ் & ஹார்டுவேர்ஸ் சப்ளை செய்ததன் பட்டியல் ரூ.13708/– பழுது பார்ப்பு பணிகள் மேற்கொண்ட திரு.எஸ்.கந்தசாமி ஒப்பந்ததாரரின் பட்டியல் ரூ.39150/– வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

பொருள்– 09. குளித்தலை நகராட்சியின் அம்மா உணவக பயன்பாட்டிற்கு தேவையான உபகரண்ங்கள் வாங்க 03.01.2020.ல் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | விபரம் | எண்ணிக்கை | நிறுவனங்கள் மற்றும் விலைப்புள்ளி தொகை ரூபாயில் | | |
|---|---|---|---|---|---|
| | | | P.S.V. கோபால் செட்டியார் சன், குளித்தலை. | சரவணா மெட்டல் மார்ட், குளித்தலை. | ராஜன் பாத்திரக் கடை குளித்தலை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1) | மின்அணு எடை இயந்திரம் | 1 | 11500.00 | 14000.00 | 13000.00 |
| 2) | சில்வர் வாளி | 6 | 3299.99 | 2570.00 | 3300.00 |
| 3) | அலுமினியம் டபரா செட் | 2 | 8925.00 | 8600.00 | 9400.00 |
| 4) | சில்வர் டம்ப்ளர் | 50 | 1120.00 | 1000.00 | 1750.00 |
| 5) | சில்வர்பிளேட் | 50 | 8400.00 | 8500.00 | 9750.00 |
| 6) | சில்வர் ஜக் | 4 | 1344.00 | 1360.00 | 1480.00 |
| 7) | சில்வர் தண்ணீர் ஜக் | 4 | 896.00 | 1000.00 | 1200.00 |
| 8) | கத்தரி | 6 | 638.40 | 582.00 | 690.00 |
| 9) | அருவாள்மனை | 3 | 450.00 | 450.00 | 525.00 |
| 10) | சில்வர் பில்டர் | 2 | 504.00 | 500.00 | 730.00 |
| 11) | சில்வர் டிரே | 4 | 672.00 | 660.00 | 760.00 |
| 12) | சில்வர் கரண்டி | 3 | 285.60 | 270.00 | 435.00 |
| 13) | மாப்செட் | 3 | 604.80 | 600.00 | 825.00 |
| 14) | கத்தி | 2 | 80.00 | 100.00 | 170.00 |
| 15) | பிளாஸ்டிக் டப்பா பெரியது | 6 | 806.40 | 720.00 | 1110.00 |
| 16) | பிளாஸ்டிக் வாளி பெரியது | 3 | 470.40 | 450.00 | 525.00 |
| 17) | பிளாஸ்டிக் மக் | 4 | 224.00 | 280.00 | 360.00 |
| 18) | சில்வர் கம்படம் | 6 | 3998.40 | 3750.00 | 4500.00 |
| 19) | பிளாஸ்டிக் தண்ணீர் தள்ளும் மாப் | 3 | 991.20 | 945.00 | 1050.00 |
| 20) | எலி பெட்டி | 2 | 410.00 | 500.00 | 750.00 |
| 21) | சில்வர் பானை மூடியுடன் | 1 | 789.60 | 710.00 | 850.00 |
| 22) | லைட்டர் | 2 | 100.00 | 120.00 | 150.00 |
| 23) | பிளாஸ்டிக் Broom | 3 | 352.80 | 330.00 | 375.00 |
| | | மொத்தம்<br>தள்ளுபடி ரூ. | 46862.59<br>157.59 | | |
| | | **மொத்தம்** | **46705.00** | **47997.00** | **53685.00** |

அலுவலக குறிப்பு– மேற்கண்ட விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், குறைவாக விலைப்புள்ளி வழங்கியுள்ள P.S.V. கோபால் செட்டியார் சன், குளித்தலை நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2555/2019/இ1)

பொருள்– 10. குளித்தலை நகராட்சி குடிநீர் பிரிவு லாரி TN-47-E-0264.ன் தகுதிச் சான்று பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.1.60 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள, நாள்–13.12.2019.ல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 03.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | குறிப்பிட்டுள்ள தொகை |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி குடிநீர் பிரிவு லாரி TN-47-E-0264 லாரியின் தகுதிச் சான்று பணிகள் மேற்கொள்ளுதல். | 1). லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், ஒர்க்ஸ் ஷாப் கார்னர், மேட்டூர்டேம்–636401. | 159750/– |
| | | 2). ஜே.வி.கே.ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், சாலராம்பட்டி மெயின்ரோடு, சேலம். | 173300/– |

அலுவலக குறிப்பு–

1). மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், அனைத்து இனங்களிலும் குறைந்த விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர்டேம் நிறுவன ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2). அவசர அவசியம் கருதி, ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதிபெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.2517/2019/இ1)

*******

# குளித்தலை நகராட்சி

06.01.2020.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 206 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 2 | 2 | 207 | அனுமதி அளிக்கப்பட்டது. |
| 3 | 3 | 208 | அனுமதி அளிக்கப்பட்டது. |
| 4 | 4 | 209 | அனுமதி அளிக்கப்பட்டது. |
| 5 | 5 | 210 | அனுமதிக்கப்பட்டது. |
| 6 | 6 | 211 | அனுமதி அளிக்கப்பட்டது. |
| 7 | 7 | 212 | அனுமதி அளிக்கப்பட்டது. |
| 8 | 8 | 213 | பதிவு செய்யப்பட்டது. |
| 9 | 9 | 214 | ஏற்கப்பட்டது. |
| 10 | 10 | 215 | அங்கீகரிக்கப்பட்டது. |

ஒம்/—ந.புகழேந்தி,
நகராட்சி பொறியாளர்,
ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர்(பொ),
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்(பொ),
குளித்தலை நகராட்சி.